## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 02 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படும் 13 மயானங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்காமையினால் காணி கட்டடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 13 மயானங்களின் பெறுமதிகளும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| (ஆ) | பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக எல்லைக்குள் ரூபா 880,625 பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட வாராந்த சந்தை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்காமையினால் காணி கட்டடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | வாராந்த சந்தையின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | ஊரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | சபைக்கு உரித்தான 13 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் | 13 வாகனங்களின் பெறுமதிகளும் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் | 13 வாகனங்களினதும் பெறுமதிகள் மதிப்பிடப்படுவதற்காக தொடர் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கப்படாமையினால் மோட்டார் வாகனங்களினதும் வண்டிகளினதும் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உள்ளடக்கப்பட வேண்டும். | மேற்கொள்ளப்படுகின்றது. |

**1.4 நிகழத்தக்க பொறுப்புக்கள்**

2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சபையினால் ஒரு வெளித்தரப்பினருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன்,அது தொடர்பாக தகவல்கள் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் 2013 திசெம்பர் 06 ஆம் திகதி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காக்கை தீவு சந்தைக்கடைக்கான குத்தகை ரூபா 275,508 குத்தகைதாரரிடமிருந்து 03 வருடங்களாக அறவிடப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக 92/15 ஆம் இலக்க வழக்கு 04 திசெம்பர் 2015 ஆம் திகதியிலிருந்து நடைபெறுகின்ற போதும் இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வழக்கிற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | இனி வருங்காலங்களில் நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| (ஆ) | கல்லுண்டாய் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையம் தொடர்பாக சபைக்கு எதிராக AR/175/15 ஆம் இலக்க வழக்குத் தொடரப்பட்டிருந்த போதும் இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வழக்கிற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | இனிவருங்காலங்களில் நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது |

**1.5 இணக்கமின்மைகள்**

**1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் உப பிரிவு 16 (2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தும் தவறுதலாக இணைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்<br>பிரிவு 158 (1) | ரூபா 14,549,915 பெறுமதியான ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு செயலாளரினால் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பற்றாணைச்சீட்டு வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள்<br>இலக்கம் 571 | ரூபா 129,816 பெறுமதியான 02 வருடங்களிற்கு மேற்பட்ட வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | குறித்த பிடிபணத்தொகை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| (ஈ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம்<br>07 மார்ச் 2017 இன் PE/01/2017 ஆம் இலக்கம் | பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்த 21 உத்தியோகத்தர்களால் கூட்டுமொத்தம் ரூபா 116,000 பெறுமதியான பிணைப்பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றுநிருபத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பிணைப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**1.5.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% விற்பனை வரி அறிவிடப்பட வேண்டிய போதிலும், சபையினால் அவற்றினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணிகள் விற்பனை மீது 1% விற்பனை வரி அறவிடப்பட வேண்டும் | பகிரங்க ஏலவிற்பனையில் அறவிடப்பட்டு வருவதுடன் தரகர்கள் மூலமாக விற்கப்படும் காணிகள் தொடர்பில் அறவீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 75,228,272 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 50,399,647 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 7,859,600 | - | 8,052,726 | 14,549,915 | 7,857,820 | - | 8,808,665 | 12,059,285 |
| வாடகைகள் | 10,233,300 | - | 11,928,676 | 279,758 | 9,782,649 | - | 10,358,209 | 283,508 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,930,700 | - | 3,476,268 | 28,500 | 2,425,256 | - | 2,907,748 | 28,500 |
| ஏனைய வருமானம் | 116,186,200 | - | 124,153,988 | 49,990,569 | 100,118,830 | - | 86,428,710 | 142,460,738 |
| | **137,209,800** | **-** | **147,611,658** | **64,848,742** | **120,184,555** | **-** | **108,503,332** | **154,832,031** |

* பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 108,503,332 ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 147,611,658 ஆக அதிகரித்துள்ளமையால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 39,108,326 இனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும் வருமானத்தினை பட்டியலிட சபை தவறியிருந்தது. | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த வேண்டும். | எதிர்வருங்காலங்களில் வருமானங்கள் பட்டியலிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 2.2.3 வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் வீதவரி நிலுவை ரூபா 14,549,915 பெறுமதியினை சபையினால் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி நிலுவைகளை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நடுக்கட்டல் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு நிலுவைகள் அறவிடப்பட்டு வருகின்றன. |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் குத்தகை நிலுவைரூபா 275,508 பெறுமதியினை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவைகளை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | சந்தைக்கான குத்தகை ரூபா 275,508 அறவிடுவதற்காக வழக்கு நடைபெறுகின்றது. |

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் வியாபாரங்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் நிலுவை ரூபா 12,500 பெறுமதியானது அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவைகளை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டுக்கான ரூபா 6,000 பெறுமதியான தொலைத்தொடர்பு கோபுரங்களின் உரிமங்களும் நிர்மாணித்தல் கட்டணங்களும் அறவிடப்படாமல் நிலுவையாகவுள்ளது. | நிலுவையாகவுள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களின் உரிமங்களும் நிர்மாணித்தல் கட்டணங்களும் முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,275,138 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் ரூபா 38,715,431 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன். | நீதிமன்ற தண்டப்பண நிலுவைகளையும் முத்திரைக் கட்டண நிலுவைகளையும் முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணங்கள், முத்திரைக் கட்டணங்களின் நிலுவைகளைப் பெறுவது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 22 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | அனைத்து செயற்பாடுகளிற்கும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | நடப்பாண்டிலிருந்து தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

#### (ஆ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைவதற்கு தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரான்பற்று வாராந்த சந்தை நிர்மாணித்தலுக்கு ரூபா 880,625 தொகையொன்று ஏற்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு அடைந்து கொள்ளப்பட்டிருந்த போதிலும்,03 வருடங்களாக சந்தை பயன்படுத்தப் பட்டிருக்காமையினால் எதிர்பார்க்கப்பட்ட | குறிப்பிடப்பட்ட வாராந்த சந்தையினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | குறித்த வாராந்த சந்தையானது மாற்றுப் பயன்பாட்டிற்கு பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

விளைவுகளினை அடைந்து கொள்ள முடியாதிருந்தது.

**(இ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் திண்மக் கழிவகற்றல் மற்றும் கொல்களம் அமைத்தல் செயற்பாடுகளின் செயலாற்றலினை ஆரம்பிப்பதற்கு ரூபா 4,085,815 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும்,2014 பெப்ரவரியில் இருந்து தேசிய பாதுகாப்பு நோக்கத்திற்காகக் குறிப்பிட்ட இடம் கையகப்படுத்தப்பட்டுள்ளமை காரணமாக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினைப் பெற்றுக்கொள்ளாது அந்த செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட செயற்பாடுகளை குறிப்பிட்ட இடத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஈ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 07 செயற்பாடுகள் ஆரம்பிக்க வேண்டிய திகதி குறிப்பிடப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தும் 31 திசெம்பர் 2018 வரை குறிப்பிட்ட செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடுகளினை உரிய நேரத்தில் முடிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**(உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட காலம் மற்றும் குறுங்கால செயற்றிட்டங்களுக்கென மீளாய்வாண்டில் ரூபா 76,900 செலவினம் | வருமானங்களை அதிகரிக்கவும் செலவினங்களைக் குறைக்கவும் நடவடிக்கை | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சபையின் வருமானமாக ரூபா 446,510 பெறப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட வேண்டும். | |
| (ii) | காக்கை தீவில் திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக குறிப்பிட்ட பிரதேசம் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் தேசிய கொள்கைகளின்படி திண்மக்கழிவுகள் தரம் பிரிக்காமல் சேகரிக்கப்படுவதுடன் கழிவுகள் கொட்டப்படும் இடங்களில் நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட்டிருக்கவில்லை. | தேசிய கொள்கைகளின்படி திண்மக்கழிவுகள் தரம் பிரிக்கப்படுவதுடன் கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட வேண்டும். | பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (iii) | திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு காலத்திற்கு காலம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுகாதாரத் தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நடப்பாண்டில் அனைத்து சுகாதாரப் பணியாளர்களுக்குமான மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஊ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த சனசமுக நிலைய மானியங்களில் ரூபா 220,000 தொடர்பில் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சனசமுக நிலைய மானியங்கள் உரிய காலத்தில் உரிய தேவைக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். | சனசமுக நிலையங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் நிலையான வைப்பில் உள்ள நிதி ரூபா 122,713,429 இனை பயன்படுத்தி அபிவிருத்தித் திட்ட வேலைகளினை நடைமுறைப்படுத்தாது வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் வைப்பிலிடப்பட்டிருந்தது. | நிலையான வைப்பில் உள்ள நிதியினைக் குறிப்பிட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நடப்பாண்டில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. |
| (இ) | கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய பிரதேசங்களுக்குரிய ஆதனங்களுக்கான ஆதனவரி மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி மீள் மதிப்பீடு உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆதன மீள்மதிப்பீடு நடாத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது |
| (ஈ) | உள்ராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாமையினால் பிரதேசசபைக்குரிய முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தது. | அறிக்கைகள் உரிய காலத்தில் தயாரித்து சமர்ப்பிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | குறித்த அலுவலருக்கு இவ்விடயம் தொடர்பில் உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது |
| (உ) | பிரதேச சபையானது பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் அதில் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தன. | மக்களுக்கு உரிய காலத்தில் சேவைகள் வழங்கப்பட வேண்டும். | பிரதேச சபையினால் வழங்கப்படும் சேவைகள் ஏனைய திணைக்களங்களுடன் இணைந்த வகையிலானதாகையால் தாமதங்கள் ஏற்படுகின்றன. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 11 மனித வளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு சமனான பதவியினர் நியமிக்கப்பட வேண்டும். | வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் என்பவற்றின் சோலைவரி அறவிடுவதற்காக வருடாந்தம் சபையினால் ஆதன உரிமையாளர்களுக்கு K படிவம் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2018 ஆம் ஆண்டில் 20,525 ஆதனங்களுக்கு K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | K படிவம் விநியோகிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 'K' படிவம் விநியோகிக்கப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சினால் சபைக்கு 20 ஆகஸ்ட் 1999 இல் வழங்கப்பட்ட 252 - 6555 இலக்க பிக்கப் வாகனமானது சபையின் தவிசாளரால் பயன்படுத்தப்பட்டு வந்தது. 17 பெப்ரவரி 2003 அன்று சபை கலைக்கப்பட்ட நிலையில் தவிசாளரினால் அவ் வாகனம் சபையின் செயலாளரிடம் மீளக்கையளிக்காத நிலை அவதானிக்கப்பட்டுள்ளது. கடந்த 15 வருடங்களாக இவ் வாகனத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட வாகனத்தினை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | குறித்த வாகனம் தொடர்பாக மீளப்பெறுவதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | கூட்டுமொத்தம் ரூபா 13,775,306 பெறுமதியான 12 ஆதனங்கள் நாளதுவரை சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை | ஆதனங்களின் உரிமையினை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | குறித்த ஆதனங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| (இ) சபையினால் 02 வாகனங்கள் 13 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வந்திருந்த போதும் அவை சபைக்கு உரிமை மாற்றப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையினைமாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிமை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**3.5.2 விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| EPJZ – 8305 பதிவு இலக்கமுடைய பவுசரும், இன்னொரு பதிவு இலக்கமற்ற பவுசரும் உக்கி பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுவதனை நேரடிப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டுள்ளது. | பவுசர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிமை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) சபையின் பாதீட்டு மீண்டுவரும் செலவினங்களையும் உண்மையான மீண்டுவரும் செலவினங்களையும் ஒப்பிடும் போது ரூபா 32,480,193இனால் சாதகமாகக் காணப்படுகிறது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்வருங்காலங்களில் பாதீட்டினை வினைத்திறனாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) சபையின் பாதீட்டில் மீண்டுவரும் செலவுகளான பயணச்செலவு, மூலதனச்செலவுகளை பழுதுபார்த்தல், மானியமும் உதவுதொகைகளும், ஓய்வூதியங்கள் என்பவை உண்மையான செலவிலிருந்து கூடுதலான வீதமானது சேமிப்பாகக் காணப்பட்டிருந்தது. இதனால் ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்பட்டது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்வருங்காலங்களில் பாதீட்டினை வினைத்திறனாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |